**வானவில் கலையகம்**

உங்கள் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகள்
எதுவானாலும் சிறந்த முறையில் அதி உயர்
தொழில்நுட்பத்தில் வீடியோ படம் பிடித்திடவும்
போட்டோ அல்பம் தயாரித்திடவும்

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internetமூலம்
உங்கள் இல்ல நிகழ்வுகள் , ஆலய நிகழ்வுகள்
எதுவானாலும் அதி உயர் தரத்தில் நேரடியாக
(LIVE TLECAST) மூலம் பார்த்து மகிழ்ந்திடவும்

**தொடர்பு கொள்ளுங்கள்**

**வானவில் கலையகம்**

இல 330, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தி)
யாழ்ப்பாணம்

0212229466 , 0772487550

www.vanavilstudio.com



10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

Ethiroli

குரல் 01 | அதிர்வு 80 | செவ்வாய்க்கிழமை ஓகஸ்ட் 01 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48


## கொழும்பு வந்த விமானத்தில் தீ




இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இன்று காலை வந்துகொண்டிருந்த விமானத்தில் திடீரென தீ பற்றியுள்ளது. எனினும் பெரும் அனர்த்தம் நிகழாவண்ணம் தீ உடனடியாக அணைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. இந்தியாவின் கேரள மாநிலம் கொச்சியில் இருந்து 202 பயணிகளுடன் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் கொழும்புக்கு வந்துகொண்டிருந்தது. அப்போது விமானத்தில் இருந்த சிப்பந்திகள் பயணிகளின் இருக்கைக்கு மேலே உள்ள லக்கேஜ் வைக்கும் பகுதியில் இருந்து திடீரென புகை வருவதை சிலர் அவதானித்துள்ளனர். உடனே அவர்கள் அதனை அணைத்து

06



## டெங்கு 310 பேர் மரணம்

அரசு டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு வெளியிட்டுள்ள தகவல்களின்படி, இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் இனங் காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 15 ஆயிரத்தை கடந்துள்ளதோடு, அதனால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கையும் 310 ஆக உயர்ந்துள்ளது. சுகாதாரத் துறையினரால் பெரும் அச்சுறுத்தல் எனக் கருதப்படும் டெங்கு நோயைப் பரப்பும் கொசுவுக்கு எதிரான போராட்டம் பல்வேறு வகையிலும் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் மே மாதம் தொடக்கம் நோயாளர்களின் எண்ணிக்கையிலும் மரணங்களிலும்

06

# பொலிஸை வெட்டிய இருவர் சிக்கினர்



கோப்பாய்ப் பகுதியில், பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். 20, 23 வயதுகளையுடைய குறித்த 2 இளைஞர்களும், இன்று காலை கைதுசெய்யப்பட்டனர் என்று, பொலிஸார் மேலும் தெரிவித்தனர். கொக்குவில் நந்தாவில் பகுதியில், பகல்நேர நடமாடும் கடமையில் ஈடுபட்டிருந்த கோப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர் இருவர் மீதே, நேற்றுமுன்தினம் இந்த வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. (எ)

## மாகாண சபையில் கடும் வாக்குவாதம்

ஹம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் தொடர்பில் வடமேல் மாகாண சபையில் இன்று கடும் வாக்குவாதம் நிலவியது.
ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதற்கு ஆளும் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அமைச்சர்கள் தவிர ஏனைய ஆளும் தரப்பு உறுப்பினர்கள் கையில் கறுப்புப் பட்டியணிந்து சபைக்கு வருகை தந்திருந்தனர். இதற்கு எதிர்த் தரப்பினர் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். குறித்த ஒப்பந்தம் தொடர்பில் காரசாரமான விவாதங்கள் நிலவியதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் நிலவியுள்ளது. (எ)

### உள்ளூராட்சித் தேர்தலில்

## தனித்தே போட்டி

உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து போட்டியிடுமென ஐக்கியக் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார். எந்த அரசியல் கட்சியாவது எம்முடன் இணைய விரும்பின் அவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு நாம் தயார். மேலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு திறமையானவர்களை தெரிவு செய்வதற்கு இம் மாதம் விண்ணம் கோரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)




## பங்காளிச் சந்திப்பை தவிர்க்கும் சம்பந்தன்

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனுக்கும், வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனுக்குமிடையிலான பிரத்தியேக சந்திப்பின்போது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் இணைந்து பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டபோதும் அது குறித்த திகதி கூறப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் தற்போது புளொட் அமைப்பு சுழற்சி முறையிலான மேலதிக ஆசனத்தினை தமக்கு வழங்குமாறு கோரி கடிதம் அனுப்பியுள்ளனர். எனினும் அந்த ஆசனம் தமிழரசுகட்சியின் உறுப்பினரும் ஈ.. பி.ஆர்.எல்.எப்.ஊடாக போட்டியிட்டவருமான ஜெயசேகரத்துக்கு வழங்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் தற்போதைக்கு பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் உட்பட வடமாகாண முதலமைச்சர் சி.வி.யுடனான சந்திப்பை எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தவிர்க்க முனைவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-09)

# ஹயஸ் - ஹன்ரர் விபத்து




வவுனியா, மூன்று முறிப்பு ஏ-9 வீதியில் ஹயஸ் மற்றும் ஹன்ரர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் இன்றைய தினம் காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
கொழும்பில் இருந்து கிளிநொச்சி நோக்கி குடும்பம் ஒன்றினை ஏற்றிச் சென்ற ஹயஸ் வாகனம் ஏ-9 வீதி மூன்று முறிப்பு பகுதியில் சுண்ணாம்பு பைக்கற்றுக்களை ஏற்றி வந்த ஹன்ரர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹன்ரர் வாகனம் மூன்று முறிப்பு பகுதியில் காற்று போனமையால் அதன் பின் ரயர்களை கழற்றிக் கொண்டிருந்த போது பின்னால் வந்த ஹயஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கோயில் கதவு உடைத்து பிள்ளையார் சிலை திருட்டு

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தலவாக்கலை பெரிய மல்லிகைப்பூ தோட்டத்தின் வழிப்பிள்ளையார் ஆலயத்தில் இரும்புக் கம்பியால் பொருத்தப்பட்டிருந்த கதவு உடைக்கப்பட்டு உள்ளே இருந்த பிள்ளையார் சிலையை அடையாளம் தெரியாதவர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என விசாரணைகளை மேற்கொள்ளும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். சிலை காணாமல் போனதையடுத்து பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸாருக்கு முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளனர். அதனையடுத்து பொலிஸார் ஆலயக் கட்டடத்துக்குச் சென்று சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த ஆலயத்தில் இது மூன்றாவது சம்பவமாக பதிவாகியுள்ளதோடு, இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் இவ்வாறு சிலைகள் களவாடிச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)



# நடு வீதியில் தீப்பிடித்த பஸ்



கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற அதிநவீன பஸ் ஒன்று தீபிடித்து எரிந்தமையால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கேகாலை, கலிகமுவ பிரதேசத்தின் நடுவீதியில் வைத்து சொகுசு பஸ் வண்டி திடீரென தீ பற்றி எரிந்துள்ளது. மோட்டார் சைக்கிள் ஒன்று, பஸ்ஸில் மோதுண்டமையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதன்போது தீயைக் கட்டுப்படுத்துவதற்காக பலர் முயற்சித்த போதிலும் அது தோல்வியடைந்துள்ளது. இந்த நிலையில் அந்த வண்டி முழுமையாக தீபற்றி எரிந்து சாம்பராகியுள்ளது. எனினும் தீயினால் எவ்வித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## பாக்கியம் முன்பள்ளி விளையாட்டு விழா

பாக்கியம் பாலர் பாடசாலையின் மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நாளை நடைபெறவுள்ளன.

முன்பள்ளியின் பிரதம ஆசிரியர் எஸ்.கே.லதா தலைமையில் வண். வடமேற்கு, ஆறுகால்மடம், மைலு வீதியில் நாளை புதன்கிழமை மாலை 2.30 மணியளவில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், பார்ப்போரைக் கவரும் வகையில் சிறுவர்கள் தங்கள் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தவுள்ளனர்.

இந்த விளையாட்டு நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் பார்த்து ரசித்து சிறுவர்களை ஊக்கப்படுத்துமாறு பாக்கியம் முன்பள்ளிக் குடும்பத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஆ)

## ஆசிரியர் பற்றாக்குறை பெற்றோர் கவலை

முல்லைத்தீவு துணுக்காய் கோட்டைக்கட்டியகுளம் அ.த.க பாடசாலையில் தமிழ் உட்பட முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆரம்பப் பிரிவு வகுப்புகளிலேயே கூடுதலாக ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதாகவும் ஆசிரியர்கள் பற்றாக்குறையினைத் தீர்ப்பதற்கு துணுக்காய் கல்வி வலயம் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். இப்பாடசாலையினை நம்பியே மாணவர்கள் உள்ளனர். இப்பாடசாலையில் ஆசிரியர்
கள் இல்லாத நிலையில் பதினைந்து கிலோமீற்றர் தாண்டி வேறுபாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்ல வேண்டிய நிலை உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (உ)

# தமிழ் முற்போக்கு கூட்டணி ஒரே கட்சியாக மாறும்



"தமிழ் முற்போக்கு கூட்டணி ஒரே கட்சியாகவும் எமது தொழிற்சங்கங்கள் ஒரே சங்கமாகவும் விரைவில் மாறும்" என, மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணி பிரதித் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

"தமிழ் முற்போக்கு கூட்டணியின் கட்சிகள் ஒன்றுடன் ஒன்று கலந்து, கூட்டணி என்பது தனியொரு கட்சியாகச் செயற்பட வேண்டிய அடுத்த கட்டம் உதயமாகி விட்டது என எண்ணுகிறேன்.

அதேபோல், எமது கூட்டணியின் தொழிற்சங்கங்களான தொழிலாளர் தேசிய சங்கம், மலையக தொழிலாளர் முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவையும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு ஒரே தொழிற்சங்கமாக புதிய பொதுப் பெயரில், தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற அரசியல் கட்சியின் தொழிற்சங்கமாகச் செயற்படவேண்டிய காலமும் உதயமாகி விட்டது என எண்ணுகிறேன்.

"இது பற்றி, கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன் மற்றும் பிரதித் தலைவர் அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஆகியோரிடம் நான் கலந்து பேசியுள்ளேன். இது விடயமாக எம் மத்தியில் புரிந்துணர்வும் கொள்கை ரீதியான பொது உடன்பாடும் ஏற்பட்டுள்ளன" - என்றார்.

# நபர்களை விடுத்து கட்சியைக் காக்க முனைக!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பாரம்பரியக் கட்சியாகும். இதனைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமானதும். நாங்கள் நபர்களுக்கு முக்கியத்துவம் அளித்து கட்சியை பிளவுபடுத்துவதற்கு இடமளிக்கக் கூடாது என முன்னாள் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கேட்டுக் கொண்டார்.



"நான் சுதந்திரக்கட்சியின் உறுப்பினர். மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நான் மத்திய அரசாங்கத்திலும் இருந்தேன். தற்போது மைத்திரிபால சிறிசேன தலைவராக இருக்கின்றார். அதற்காக கட்சிப்பணிகளில் நான் ஈடுபடாமலிருக்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில் நாட்டில் முக்கிய விடயங்களை முன்னெடுப்பதற்காகவே தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே, நல்லாட்சி என்பது அமைச்சரவையில் காணப்படவில்லையே தவிர, ஜனாதிபதி. பிரதமரிடத்தில் காணப்படுகின்றது" என்றார். (உ-09)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848



## தமிழ் இலக்கிய விழா

கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் தமிழ் இலக்கிய விழா நேற்று ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக மருதமுனை – கல்முனை பிரதான வீதியில் பண்பாட்டுப் பேரணி நடைபெற்றது. (உ)



# கத்திச் சிலைக்கு அனுமதி மறுப்பு

பிரிட்டனில் ஒரு லட்சம் கத்திகளால் உருவாக்கப்பட்ட தேவதைச் சிலையை நிறுவ அந்த நாட்டு அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

லண்டனில் 27 அடி உயரத்தில் ஒரு லட்சம் கத்திகளைக் கொண்டு ஒரு சிலை உருவாக்கப்பட்டது. அந்தச் சிலையின் சிறப்பு அம்சமே, குற்ற வாளிகளிடம் இருந்து மீட்கப்பட்ட ஒரு லட்சம் கத்திகள்தான். பிரிட்டன் மற்றும் வேல்ஸ் பகுதிகளில் பல்வேறு குற்றங்கள் நிகழ்ந்தபோது மீட்கப்பட்ட ஒரு லட்சத்துக்கும் அதிகமான கத்திகளைக் கொண்டு , கடந்த 2வருடங்களாக இந்தக் கத்திச் சிலை உருவாக்கப்பட்டது. அல்பிராட்லி என்ற சிற்பி இதனை உருவாக்கியிருந்தார். 'குற்றங்களைக் குறைப்போம், கத்திகளைத் தடுப் போம்' என்பதே இந்தச் சிலை உருவாக் கத்தின் தொனியாக இருந்தது. எனினும் இந்தக் கத்திகளால் உருவாக் கப்பட்ட தேவதைச் சிலை வன்முறை யைத் தூண்டுவதாகக் கூறி,அதனை நிறுவ பிரிட்டன் அரசு மறுப்பு வெளி யிட்டுள்ளது. (இ)





# துணிச்சல் விமானி: குவியும் பாராட்டு

துருக்கியில் நடுவானில் ஆலங்கட்டி மழையில் சிக்கி, சேதமடைந்த விமானத் தைப் பத்திரமாக தரையிறக்கி 127 உயிர்களைக் காப்பாற்றிய விமானியை அனைவரும் பாராட்டி வருகின்றனர். 127 உயிர்களை காப்பாற்றிய துருக்கி நிறுவனத்தில் பணியாற்றி வரும் கப் டன் அலெக்சாண்டர் அகோபோவின் தைரியத்தை பாராட்டி உக்ரைனின் உரிய விருதும் வழங்கப்பட்டுள்ளது. துருக்கியில் இடி மின்னலுடன் பலத்த காற்றுடன் மழை பொழிந்து வரும் நிலையில் விமானி அலெக்சாண்டர் அகோபோவ் , 121 பயணிகளுடன் விமானத்தைச் செலுத்திச் சென்றார். ஆனால், திடீரென நடுவானில் பெய்த ஆலங்கட்டி மழை, பயங்கர காற்று என்பவற்றில் சிக்கி விமானம் பயங்கர சேதமடைந்துள்ளது. விமானத்தின் முன் பகுதி மற்றும் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்துள்ளன. ஆயினும் அதைப் பொருட் படுத்தாமல் தைரியமாக விமானத்தைச் செலுத்தி, பத்திரமாகப் பயணிகள் அனைவரையும் தரையிறக்கியுள்ளார் அலெக்சாண்டர். (இ)


# ஆப்கானில் 7 பேர் சாவு!



ஆப்கானிஸ்தானிலுள்ள ஈராக் தூ தரகத்தின் அருகே தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில்7 பேர்பலியாகினர். இதுகுறித்து ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தரப்பில், "ஆப்கா னிஸ்தானின் தலைநகர் காபூலி லுள்ள ஈராக் தூதரகத்துக்கு வெளியே தீவிரவாதிகள் நேற்றுத் திங்கட் கிழமை தற்கொலைப் படைத் தாக்குதலை நடத்தினர். தூதரகக் கட்டடத்துக்குள் இருந்த அனைத்து அதிகாரிகளும் பாதுகாப்புப் படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். நான்கு தீவிரவாதி கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள் ளனர்.எனினும் இதன்போது 7 படைவீரர்கள் உயிரிழந்தனர்" என்று கூறப்பட்டுள்ளது. (இ)

# 189 கொலைகள் கொடூரப் பெண் கைது!


அமெரிக்காவில் 189 கொலைகளுடன் தொடர்புடையதாக, பெண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். 39 வயதான லாரெட்டா ஜோன்ஸ் என்ற பெண்ணே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார். 1993 முதல் 2017 இடையே மற்றும் மெக்சிகோ ஆகிய இரு நாடுகளிலும் இடம்பெற்ற 189 கொலைகளுடன் லாரெட்டா ஜோன்ஸூக்குத் தொடர் புள்ளதாகக் கூறப்படுகின்றது. ஒரு பெரிய நிதி நிறுவனத்தின் கடன் சேகரிப்பாளராகப் பணியாற்றிய ஜோன்ஸ், கலிபோர்னியாவிலும், அமெரிக்காவின் எல்லை மாநிலங்களிலும் மற்றும் வடக்கு மெக்ஸிகோவுக்கும் பயணம் மேற்கொண் டுள்ளார் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. கலிபோர்னியாவில் இடம்பெற்ற 137 கொலைகள், ஒரேகானில் 16, அரிசோனா வில் 11, நெவாடாவில் 8, மெக்சிக்கோவில் 17 என பல கொலைகளுடன் ஜோன்ஸூக் குத் தொடர்புடையதைப் பொலிஸார்



கண்டறிந்துள்ளனர்.மனநோய் காரணமா கவே இவ்வாறு தொடர்கொலைகளில் அவர் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறுகின்றார். (இ)

# மாடுரோ சர்வதிகாரி

## அமெரிக்கா அறிவிப்பு



வெனிசூலாவின் ஜனாதிபதி நிக் கோலஸ் மாடுரோவை 'சர்வாதிகாரி' என்று முத்திரை குத்தி, அவர் மீது அமெரிக்கா தடைகளை விதித் துள்ளது. நிக்கோலஸ் மாடுரோவுக்கு அமெ ரிக்காவில் ஏதேனும் சொத்துக்கள் இருந்தால் அவை தடை செய் யப்படும் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது. மாடுரோ வெனிசூலா நாட்டின் ஜனநாயகத்துக்கு ஆபத் தானவர் எனவும், அவர் சட்ட விரோதமாகத் தேர்தல் நடத்தி யுள்ளார் என்றும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை வெனிசூலாவில் அரசியலமைப்புச் சட்ட அவையை அமைக்கும் விதத்தில் தேர்தல் ஒன்றை ஜனாதி பதி மாடுரோ நடத்தினார். உள்நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவி வரும் நிலையில், எதிர்க்கட்சிகள் பெரும்பான் மையாகவுள்ள நாடாளுமன்றத்தை ஓரங்கட்டி தனது அதிகாரத்தை நிலைநிறுத்தவே மாடுரோ இவ்வாறு செய்துள்ளதாகக் கூறப் படுகிறது. (இ)

# தங்கச் சுரங்கத்தில் அதிகாரிகள் பலி



கொலம்பியா நாட்டில் சட்ட விரோதமாக இயங்கி வந்த தங்கச் சுரங்கத்தில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். கொலம்பியா நாட்டின் அண்டியோகியியா மாகாணத்தில் இயங்கிவந்த ஒரு தங்கச்சுரங்கம் சில மாதங்களுக்கு முன்பாக மூடப்பட்டது. மூடப்பட்ட சுரங்கங்களில் அரசின் அனுமதி பெறாமல் சிலர் சட்டவிரோதமாக நுழைந்து தங்கத்தை வெட்டி எடுத்துச்செல்கின்ற னர்.இதனால் இத்தகைய சுரங்கங்களில் அதிகாரிகள் சோதனையிடுவது வழக்கம். அவ்வாறு சோதனையிடச் சென்ற போது, ஒரு கும்பல் திருட்டுத்தனமாக தங்கத்தை வெட்டி யெடுத்துக் கொண்டிருப்பதை அதிகாரிகள் கையும் மெய்யுமாகக் கண்டுபிடித்தனர். ஆனால் தாங்கள் தப்பிப்பதற்காக தங்கக் கொள் ளைக் கும்பல் சுரங்கத்துக்குள் குண்டை வெடிக்கச் செய்தது. இதில் அதிகாரிகள் 6 பேர் பலியாகினர்.கொள்ளைக் கும்பல் தப்பியோடிவிட்டது. (இ)

# நானே தலைவர்

பாஜக தேசியத் தலைவராக முழு மனதுடனும், மகிழ்ச்சியுடனும் பணியாற்றி வருவதால் அந்தப் பதவியைக் கைவிடும் பேச்சுக்கே இடமில்லை என்று அமித் ஷா திட்டவட்டமாகத் தெரிவித்துள் ளார். மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டால் பாஜக தேசியத் தலை வர் என்ற கட்சிப் பதவியை அவர் துறந்து விடலாம் என்ற ஐயங்களுக் கும், செய்திகளுக்கும் அமித் ஷா முற்றுப்புள்ளி வைத்தார். மேலும் பாஜக பிஹாரில் எந்தக் கட்சியையும் உடைக்கவில்லை என்றும் மறுத்தார் அமித் ஷா. "நிதிஷ் குமார் ஊழலுடன் தொடர முடியாது என்று பதவியை ராஜினாமாச் செய்தார். நாம் அவரைப் பதவியில் தொடரச் செய்திருக்க வேண்டுமா? இல்லையா? நியாயத்துக்காக அவர் பக்கம் நிற்கிறோம்" என்றும் அவர் கூறினார். அதே போல் ராஜ்யசபாவுக்கு தேர்வு செய்யப்பட்டால் பாஜக தலைவர் பதவியை உதறுவீர்களா என்ற கேள்விக்குப் பதிலளித்தபோது, "அந்தக் கேள்விக்கே இடமில்லை. கட்சித் தலைவராக எனக்குப் பொறுப்புகள் இருக்கின்றன. நான்மகிழ்வுடனும் மனப்பூர்வமாகவும் இந்தப் பணியைச் செய்து வருகிறேன். ஊடகங்கள் இப்படியெல்லாம் யோசிக்க வேண்டாமே" என்றார்.(இ)

# டி.டி.வி.தினகரன் வருகை குறித்து அவசர கூட்டம்

எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் எம். எல்.ஏ.க்கள், மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அ.தி.மு.க. தலைமை அலுவலகத் தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நடக்கிறது. இதில் அ.தி.மு. க.வின் இரு அணிகளையும் இணைப்பது குறித்தும், டி.டி.வி.தினகரன் வருகை குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது. அ.தி.மு.க. அணிகளின் இணைப்புக்காக ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை காத்திருப்பேன் என்று 60 நாள் காலக்கெடுவை டி.டி.வி.தின கரன் விதித்திருந்தார். அவர் விதித்தகாலக்கெடு இன்னும் 3 நாட்களில் முடிவடைய உள்ளது. ஆனால் அ.தி.மு.க. இணைப்பு முயற்சி இதுவரையில் நடக்கவில்லை. இதையடுத்து 5 ஆம் திகதி சென்னை ராயப் பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்கு வந்து கட்சிப் பணிகளில் டி.டி.வி.தினகரன் ஈடுபட உள்ளதாக நேற்று தகவல் வெளியானது. மீண்டும் தினகரன் வந்தால், குழப்பத்தை உண்டாக்கும் எனப் பலரும் கருதுகின்றனர். எனவே, அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆராய அவசரமாக இந் தக் கூட்டம் இன்று நடைபெறுகின்றது.(இ)



# அதிர்ஷ்டம் கொடுத்த வெற்றி

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் அதிர்ஷ்டம் கைகொடுக்க வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

நேற்று இரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தின் ஆரம்பம் முதலே இரு அணிகளும் போட்டி போட்டு மல்லுக்கட்டின.

இதன் பயனாக ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் போட்டிருந்தமையால், ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையை அடைந்தது.

பின்னர் வெற்றியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட 'பனால்டி' உதையிலும் இரு அணிகளும் போட்டி போட்டு கோல் மழை பொழிந்தன. இதனால் 'பனால்டி' உதையும் 9:9 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இதையடுத்து வெற்றியைத் தீர்மானிப்பதற்கான மற்றொரு வழியான நாணயச் சுழற்சி முறை கையிலெடுக்கப்பட்டது. இதில் அதிர்ஷ்டம் பாஷையூர் சென். அன்ரனிஸ் பக்கம் விழுந்தமையால், அந்த அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ஐ)

# நண்பர்கள், யங்கம்பன்ஸ் வெற்றி

திக்கம் மத்திய சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டங்களில் அல்வாய் நண்பர்கள் மற்றும் யங்கம்பன்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

முதலில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதையும் போடாததன் காரணமாக, வெற்றியைத் தீர்மானிப்பதற்காக 'பனால்டி' உதை வழங்கப்பட்டது.

இதில் யங்கம்பன்ஸ் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஐ)

# இன்றைய ஆட்டங்கள்

திக்கம் மத்திய சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று இரவு இரு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் நெடியகாடு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழகம் மோதும்.

பின்னர் 8 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டத்தில் நசரத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ஐ)



# தள்ளிப்போன விவேகம்

ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கும் அஜித்தின் விவேகம் படத்தின் தணிக்கை நேற்று முடிந்துள்ளது. அனைத்துப் பணிகளும் முடிவடைந்து விட்டதால் படம் முன்னர் கூறியது போல ஒகஸ்ட் 10ஆம் திகதி வெளிவரும் என எதிர்பார்க்கப்பட்டது.

தற்போது இயக்குநர் சிவா ருவிட்டரில் வெளியீட்டுத் திகதியை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். படம் ஒகஸ்ட் 24 இல் வெளியாகும் என அவர் தெரிவித்துள்ளார். (இ)



# ஓவியா வெளியே?

ஓவியா இல்லையென்றால் பிக்பாஸ் நிகழ்ச்சியைப் பார்க்க மாட்டோம் என்கிற பாணியில் ரசிகர்கள் பேசி வருகின்றனர். ஓவியாவுக்காக ரசிகர்கள் ஒருபக்கம் குரல் கொடுக்க, சில பிரபலங்களும் தங்களது படத்தில் அவரை ஒப்பந்தம் செய்ய விரும்புவதாகக் கூறி வருகின்றனர்.

வீட்டில் உள்ளவர்கள் அவரை எலிமினேட் செய்ய விருப்பம் தெரிவித்து வந்தாலும், ஓவியாவே நிகழ்ச்சியில் இருந்து வெளியேற வேண்டும் என்று கூறி வருகின்றாராம்.

இதனால் இந்த வாரம் ஓவியா எலிமினேட் செய்யப்படாமல் ஸ்ரீ வெளியேறியது போல் வெளியேறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஓவியாவின் இடத்தை நிரப்பவே பிந்து மாதவி புதிதாக உள்ளே வந்ததாகவும், ஓவியா போன பின்னர் அனைவரும் பிந்துமாதவியைக் குறி வைப்பார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. நான்கு முறை ரசிகர்களின் வாக்குகளால் ஓவியா காப்பாற்றப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



# மொயின் ஹட்ரிக்!

சர்வதேச டெஸ்ட் போட்டியில் 79 ஆண்டுகளுக்கு பின் ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்திய இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை மொயின் அலி பெற்றார்.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா இடையே 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. லண்டனில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் 492 ரன்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தில் 252 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து தோல்வியடைந்தது.

இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் மொயின் அலி தென்னாபிரிக்கா வீரர்களான டீன் எல்கர், ரபடா, மோர்னே மோர்கல் ஆகியோரின் விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தி அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார். அதுமட்டுமல்லாமல் சர்வதேச டெஸ்ட் போட்டியில் 79 ஆண்டுகளுக்கு பின் ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்திய இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையையும் அவர் நிகழ்த்தியுள்ளார். இதற்கு முன்பாக 1938 ஆம் ஆண்டில் இங்கிலாந்தைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் டொம் கோடர்ட் தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான போட்டியில் ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

இதுவரை மூன்று டெஸ்ட் போட்டிகள் முடிந்துள்ள நிலையில் மொயின் அலி மொத்தமாக 18 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். (இ)



# பிந்துமாதவியிடம் தடுமாறும் காயத்திரி

'பிக் பாஸ்' நிகழ்ச்சியில் குறிப்பிட்ட சில பேரை ரசிகர்கள் வெறுக்கிறார்கள். அதிலும் பரணியை ஒட்டுமொத்த குடும்பமும் சேர்ந்து நின்று ஒதுக்கியமை ரசிகர்களுக்குள் பெரும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் 'பிக் பாஸ்' வீட்டுக்குள் புதிதாகச் சென்றுள்ள பிந்து மாதவி, காயத்திரியிடம், பரணியைப் பற்றி சரமாரியாகக் கேள்விகளைக் கேட்கிறார்.

அதற்கு காயத்திரி பதில் கூற முடியாமல் திணறுகிறார். தற்போது இந்தக் காட்சி புதிய 'புரொமோ'வில் இடம் பெற்றிருக்கிறது.

ரசிகர்களும் காயத்திரி என்ன பதில் கூறப் போகிறார் என்பதைத் தெரிந்து கொள்ள இன்று இரவு வரை ஆர்வமாக இருக்கின்றனர். (ஐ)

# தலையாட்டும் வீரர்கள்



இந்தியக் கிரிக்கெட் அணியின் கப்டன் விராட் கோலி ருவிட்டரில் வெளியிட்ட புகைப்படத்தை யுவராஜ் சிங் கலாய்த்துள்ளார்.

இலங்கை அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியின் வெற்றியைக் கொண்டாடும் வீரர்கள் தாங்கள் எடுத்த புகைப்படங்களைத் தங்களுடைய ருவிட்டர் பக்கத்தில் பதிவேற்றம் செய்துவருகின்றனர்.

அந்த வகையில் கோலி, கே.எல்.ராகுலுடன் நீச்சல் குளத்தில் எடுத்த புகைப்படத்தை தன்னுடைய ருவிட்டர் பக்கத்தில் பதிவேற்றம் செய்திருந்தார். அதைக் கண்ட யுவராஜ் சிங் தன்னுடைய ருவிட்டர் பக்கத்தில், "பொதுவாகவே தலைவர் செல்பிக்கு போஸ் கொடுக்கச் சொன்னால், வீரர்களுக்கு வேறு வழியில்லை. என்ன சொன்னாலும் தலையாட்ட வேண்டும்" என்று கலாய்த்துள்ளார். (இ)



# பல்கலைக்கழகங்களில் புதிதாக மருத்துவ பீடங்கள்


சப்ரகமுவ, வயம்ப, மொறட்டுவ ஆகிய பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்களை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த ஆண்டு களுத்துறை, காலி, கண்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் தாதியர் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படும். இதற்காக 250 கோடி ரூபா செலவிடப்படவுள்ளதாக சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். காலி மகமோதர பிரதேசத்தில் புதிய தாதியர் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். மருத்துவ கல்விக்கான குறைந்தபட்ச தராதரங்கள் இருவாரங்களுக்குள் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படுமென தெரிவித்துள்ளார். சில மருத்துவ சங்கங்கள் தனியார் கல்விக்கு ஆட்சேபம் தெரிவிக்கின்றன. ஆனால், வெளிநாடுகளில் தனியார் மருத்துவ கல்விக்கு பரந்தளவு இடம் உள்ளது.

இங்கு கல்வி கற்ற பலர் இலங்கையில்மருத்துவர்களாக கடமையாற்றி வருகிறார்களென அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.(உ)

# இன்றைய கருத்தோவியம்




# அணிசேராக் கொள்கையை அனுசரிப்பது அவசியம்



இலங்கையின் புவியியல் அமைவிடத்தைக் கருத்திற்கொண்டு சர்வதேச கொடுக்கல் வாங்கல்களில் அணிசேராக் கொள்கையை அனுசரிப்பது அவசியமென மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இலங்கை, சீனாவுடன் கொண்டுள்ள உறவுகள் காரணமாக இந்துமா சமுத்திரத்தின் ஏனைய நாடுகளுடன் உறவுகளைத் தொடர்வதில் சிக்கல்கள் எழலாம். இதன் காரணமாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசியமாகிறதென அமைச்சர் குறிப்பிட்டார். இதேவேளை அரசியல் யாப்பு தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய கட்சி வகுத்துள்ள யோசனைகளை மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் மஹாநாயக்கர்கள் மத்தியில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விபரித்தார். (உ)

# வடக்கில் ஜேர்மனின் பயிற்சி நிலையம்



இலங்கை உற்பத்திகளுக்கு ஜேர்மனியிலும், ஜேர்மன் உற்பத்திகளுக்கு இலங்கையிலும் சிறந்த கிராக்கி நிலவுவதாக ஜேர்மன் தூதுவர் ஜோன் ரொவாட தெரிவித்தார்.

எதிர்காலத்தில் வடமாகாணத்திலும் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ஜேர்மன் எதிர்பார்த்துள்ளதாகவும் தூதுவர் தெரிவித்தார். இலங்கை வர்த்தக சமூகம் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் ஒன்றில் ஜேர்மன் தூதுவர் கலந்துகொண்டார்.

இலங்கைக்கும் ஜேர்மனுக்கும் இடையிலான பொருளாதார வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய அவர் 'இதற்கு இரு நாடுகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இந்த நிலைமையை மேலும் மேம்படுத்துவதற்கு இரு நாட்டு வர்த்தகர்களும் அக்கறை செலுத்த வேண்டும்' என்றார் அவர்.

இதேவேளை ஜேர்மன் இலங்கையில் பயிற்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

## எம்.பிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

ஒன்றிணைந்த எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிகளுக்கு எதிராக, ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்குமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் முறையிடுவதற்கு, அரசாங்கத் தரப்பு முக்கியஸ்தர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என, தகவல் வெளியாகியுள்ளது. சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர், சபைக்குள் அநாகரிகமான முறையில் நடந்துகொண்ட, ஒன்றிணைந்த எதிரணியின் உறுப்பினர்களுக்கு எதிராகவே, இவ்வாறு முறைப்பாடு செய்யப்படவுள்ளது. கடந்த 28ஆம் திகதியன்று, சபையில் ஏற்பட்ட கூச்சல் குழப்பம் காரணமாக, சபை நடவடிக்கைகள் ஒகஸ்ட் 4ஆம் திகதி வரை சபாநாயகர் கரு ஜயசூரியவால் ஒத்திவைக்கப்பட்டன.

இதேவேளை, ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் மற்றுமொரு உறுப்பினர் அமர்ந்ததையடுத்து, ஏனைய உறுப்பினர்கள் கைகளை தட்டி, ஆரவாரம் செய்துள்ளனர் என்றும் அறியமுடிகிறது. (உ)

# 1700 பட்டதாரிகளுக்கு செப்ரெம்பரில் நியமனம்



கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் செப்ரெம்பரில் 1700 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம கூறியுள்ளார். 2017ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கிய விழாவின் முதல் நாள் நிகழ்வு கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் நேற்று மாலை நடைபெற்றுள்ளது. அந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோரிடம் கலந்துரையாடியுள்ளேன். கிழக்கு மாகாணம் பலகோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. அத்துடன், கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலையை உயர்த்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

அமெரிக்கா செல்ல

## அனுமதி

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்வதற்கு, கொழும்பு மேல் நீதிமன்றம், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் ஆகியன அனுமதியளித்துள்ளன. அமெரிக்காவிலுள்ள தனது மகளைப் பார்ப்பதற்காக, ஒகஸ்ட் 8ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதிவரை செல்வதற்கு, அவர், இரண்டுநீதிமன்றங்களிலும் தமது சட்டத்தரணியூடாக, அனுமதி கோரியிருந்தார்.

குறிப்பிட்ட காலப்பகுதியில், ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்ல அனுமதித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன, 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் கடவுச்சீட்டை விடுவிக்குமாறும் உத்தரவிட்டார்.

# அடை மழை மண்சரிவு அபாயம்

இரத்தினபுரி, காலி மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

குறிப்பாக குருவிற்ற, எரத்ன, அடவிகந்த, தெவிபஹல, அதிரியவெல, சுதாகல, கீரகல, தந்தெனிய உள்ளிட்ட பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் நிலவுகின்றது. அபாயம் நிலவும் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு இது பற்றி முன்னறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை நேற்றிரவு நாட்டின் பல பாகங்களில் அடைமழை பெய்துள்ளது.

தென் மாகாணத்தில் மாத்திரமன்றி கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் சில இடங்களில் அடைமழை பெய்திருக்கிறது. சில இடங்களில் 75 மில்லி மீற்றரைத் தாண்டிய மழை வீழ்ச்சி பதிவாகியிருக்கிறது. (உ)



## நாளை நாளும் கோளும்

02.08.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 17ஆம் நாள்

தசமி பி.ப. 04.10 வரை | அனசம் மாலை 05.45 வரை | அமிர்தசித்தயோகம்

இராகுகாலம் 12.03-01.33 | சுபநேரம் 04.33-06.03 | எமகண்டம் 07.33-09.03

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உற்சாகம் | போட்டி | பொறுமை | ஓய்வு | ஆதாயம் | நட்பு | நட்டம் | செலவு | கவலை | பெருமை | பாசம் | பயம் |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்......!



## 2007.08.01

யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவன் சு.நிலக்சன் அவரது வீட்டில்வைத்து படுகொலைசெய்யப்பட்டார்.



# துப்பாக்கி காட்டி வங்கியில் கொள்ளை

புத்தல - ஹொரபொக்க - பெல்வத்தை பகுதியில் கூட்டுறவுக் கிராமிய வங்கியை உடைத்து, பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

துப்பாக்கி சகிதம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வங்கி ஊழியர்களை மிரட்டி, கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதன்போது சுமார் இரண்டு இலட்சம் வரையான பணம், தங்க நகைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளும் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை புத்தல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## சர்வதேச ஒலிம்பியாட் சாவகச்சேரி மாணவி சாதனை



சர்வதேச மட்ட ஒலிம்பியாட் போட்டிகள் நேற்று இந்தியாவில் நடைபெற்றன. இந்தப் போட்டியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவி ஸ்ரீபாலகிருஸ்ணன் வனோஜா கணித பாட ஒலிம்பியா போட்டியில் பிரிவு இரண்டில் தமிழ்மொழி மூலம் பங்கு பற்றி வெண்கலப்பதக்கத்தைப் பெற்று இலங்கைக்கும் சாவகச்சேரி மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார். (உ)

## மின்சாரச் சாணை அன்பளிப்பு

வட மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரனின், 2017 ம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஊடாக, சாணை பிடிக்கும் தொழிலாளி ஒருவருக்கு, அவரது வருமானத்தை அதிகரித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக மின்சாரத்தில் இயங்கும் சாணை பிடிக்கும் இயந்திரமொன்று வழங்கப்பட்டுள்ளது. (ஆ)



## பெற்றோலியப் பணியாளர்கள் பிணையில் விடுவிப்பு

பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கத் தலைவர் உள்ளிட்ட 16 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்ட நடவடிக்கையின் போது ஏற்பட்ட குழப்ப நிலையைத் தொடர்ந்து, கடந்த 26ம் திகதி கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கத் தலைவர் உள்ளிட்ட 16 பேரையும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரியப்படுத்தப்பட்டது. எனினும், அவர்கள் ஆஜராகத் தவறியமையால், நீதிமன்றம் அவர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய, குறித்த 16 பேரும் இன்று நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில், பிணை வழங்குமாறு கோரினர். இதனைக் கருத்தில் கொண்ட கொழும்பு மேலதிக நீதவான், சந்தேக நபர்களை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்து உத்தரவு பிறப்பித்துள்ளார். (உ)

## பொலிஸில் இணைய பட்டதாரிகளுக்கு அழைப்பு

வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினரால், அரச நியமனங்களை விரைந்து வழங்குதல் வேண்டும் என கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டத்தின் போது பட்டதாரிகளுக்கு பொலிஸ் சேவையில் அரச வெற்றிடங்கள் இருப்பதாக முதலமைச்சர் குறிப்பிட்டார். அதற்கமைய பொலிஸ் சேவையில் இணைய விருப்பமானவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன் வட மாகாண சபையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் கோரியுள்ளார்.

இதன் விண்ணப்ப முடிவுத்திகதி 15.08.2017 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## அறக் கல்விக்கான வேலைத்திட்டம்



இலங்கையின் அறநெறிக் கல்விக்காக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை தாபனமயப் படுத்துகின்ற வேலைத்திட்டத்தின் ஐந்தாவது நிகழ்வு நேற்று திருகோணமலை உட்துறைமுக வீதியிலமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண ஆளுநர் போகல்லாகம, கிழக்குமாகாண முதலமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (உ)

## வவுனியாவில் வீதி திறந்து வைப்பு



வவுனியா தெற்கிலுப்பைக் குளம் மற்றும் மாமடுச் சந்தியை இணைக்கும் அவ்வையார் வீதியானது கடந்த முப்பது வருடங்களாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலையைத் தொடர்ந்து குறிப்பிட்ட வீதி கிராம மக்களின் முயற்சியால் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியைப் புனரமைக்க வவுனியா பிரதேசசெயலகம்4 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கியுள்ளதுடன் மற்றும் வவுனியா நகரசபையினரின் அனுமதியுடனும் மக்களின் பங்களிப்புடனும் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட வீதியானது ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலையில் பாடசாலை மாணவர்கள் சுமார் இரண்டு கிலோமீற்றர் சுற்றிச் செல்லவேண்டிய நிலைமை காணப்பட்டது. இறந்தோரைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வதிலும் தெற்கிலுப்பைக்குளம் மற்றும் கோவில்குளம் கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்ததாகவும் மக்கள் தெரிவித்தனர். (உ)

### கொழும்பு...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் விபத்தை தவிர்த்தனர். பயணி ஒருவரின் பையில் இருந்த லிதியம் பற்றரி அல்லது செல்போன் பேற்றரியில் இருந்து இந்த தீ பிடித்து இருக்கலாம் என விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நேரத்தில் அந்த விமானம் கொழும்பு விமான நிலையத்தில் தரை இறங்கியது. தீவிபத்துக் குறித்து விமான நிலையைக் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்ததால் வெடிகுண்டு நிபுணர்கள், தீயணைப்பு வீரர்கள் தயாராக இருந்தனர். நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டமையால், பயணிகள் அவசரகால வழியை பயன்படுத்தாமல் வழக்கமான வழியிலேயே விமானத்தில் இருந்து இறங்கினர். இந்தச் சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஏ)

### டெங்கு...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பைக் காண முடிகின்றது. இந்த ஆண்டில் ஏப்ரல் மாதம் 12,498 நோயாளர்கள் இனம் காணப்பட்டனர். மே மாதம் தொடக்கம் ஜூலை வரையிலான தரவுகளை மையப்படுத்தி பார்க்கும் போது மூன்று மாதங்கள் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பை காண முடிகின்றது. மே மாதத்தில் 15,886 பேரும், ஜுன் மாதத்தில் 24,978 பேரும், ஜூலை மாதத்தில் 29,055 பேரும், புதிதாக இனம் காணப்பட்டுள்ளதாக அரசு டெங்கு கட்டுப்பாட்டு பிரிவில் அறிக்கையிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் கூடுதலான நோயாளர்கள் இம் மாதத்திலேயே இனம் காணப்பட்டிருந்தாலும் முதலாம் வாரத்தில் - 9322 என காணப்பட்ட எண்ணிக்கை நான்காம் வாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ளதை காண முடிவதாகத் தெரியவருகின்றது. (ஏ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 01.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.